[18th March 1963

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பவானி பாசனப் பகுதிகளில் சென்ற மூன்று ஆண்டுகளாக நெல் பயிரிடாமல் இருக்கும் விவசாயிகள் ஏழைகளாக இருக்கிறார்கள். அப்போது வசதி இல்லாமல் அவ்வாறு செய்தார்கள். இந்த ஆண்டு வசதியை அனுசரித்து நெல் பயிரிட முன் வரும்போது, சர்க்கார் தடை செய்தால், ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே, தண்டத் தீர்வையை விதிக்காமல் இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: இன்னும் இரண்டு தினங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், பதில் சொல்லுகிறேன்.

Roads and irrigation facilities (Tirunelveli district)

* 278 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from Sri M. S. Selvarajan, M.L.A. during 1960–61 and 1961–62 regarding the general improvement of roads and better irrigation facilities for the Tirunelveli district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Four representation were received during 1960–61. No representation was received during 1961–62.

(*b*) Action taken in the matter has already been intimated to the Member.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், சட்டசபை அங்கத்தினர் செல்வராஜன் கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகள் பலவற்றில் சிலவற்றின் பேரிலாவது தீர்க்கமான முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா? அதைப்பற்றி இங்கு அறிவிக்க முடியுமா?

MR. SPEAKER : It is too general a question.

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கேள்விக்குத் தக்க பதில் சொல்லியிருக்கிறேன். அவர் எழுதிய கடிதங்களுக்கெல்லாம் முறையாகப் பதில் போய்க்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாணியன் ஏரி (தஞ்சாவூர் வட்டம்)

* **279 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தாலூகா நெ. 37-ம், சித்திரக்குடி கிராமத்தில் உள்ள வாணியன் ஏரி எத்தனை ஏக்கர் நிலம்?

(இ) அந்த நிலம் சாகுபடியில் உள்ளதா?

(உ) உள்ளதென்றால் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறதா?

(எ) அந்த நிலத்தில் சாகுபடி செய்பவர்கள் அடமானம் கோரினார்களா?

18th March 1963]

கனம் திரு. வெ. ராமையா: (அ) வாணியன் ஏரியின் விஸ்தீரணம் 73.56 ஏக்கர்களாகும்.

(இ) அதில் பெரும்பகுதி அதாவது 67.45 ஏக்கர் நிலம் சாகுபடியில் உள்ளது.

(உ) & (எ)—ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த நிலத்தை அடமானம் செய்கிற போது தண்டத் தீர்வை செலுத்தி விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு அடமானம் செய்யாமல் தனி நபர்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். தண்டத் தீர்வை செலுத்தியவர்களுக்கு மட்டுந்தான் அடமானம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: என்னுடைய தகவல்படி, கலெக்டர் பரிசிலனையிலிருந்து அந்தப் பூமி யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற தகுதி பார்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் விவரங்கள் வேண்டுமானால் தனியாக எழுதி அனுப்பினால் விவரங்களை கொடுக்க முடியும்.

அமைச்சர்கள் சுற்றுப் பயணப்படி

*280 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்ற 1957-62 அமைச்சரவையில், பதவி வகித்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் பதவி வகித்த ஐந்தாண்டுகளில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந் தேதி வரையில் ஆண்டுதோறும், சுற்றுப் பயணப்படியாக எவ்வளவு தொகை பெற்றுள்ளார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the Table of the House.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, அந்த அறிக்கையைப் பார்க்கிறபோது, அமைச்சருக்கு அமைச்சர் வித்தியாசமான பிரயாணப்படி இருப்பதால் தேசிய நெருக்கடியை முன்னிட்டு பிக்ஸட் டி. ஏ. வாங்கிக் கொள்ள அமைச்சர்கள் முன்வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த அறிக்கையிலுள்ள விவரங்களை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பிரயாணப் படியில், ரெயில், ஏரோபிளேன் ஆகியவற்றுக்கான கட்டணத் தொகையைப் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. பிரயாணம் செய்கிறவர்களுக்கு ஏற்றதாகத்தான் செலவு ஏற்படுகிறது.

---

[a] Printed as Appendix on pages 501-5.7.